# தீர்வுஎதுவும் காணப்படாமல் தெரிவுக்குழு கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)
இனப்பிரச்னை தீர்வுதொடர் பாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டம் தீர்வு எதனையும் காணாமல் ஒத்திவைக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்-டு

[4-ம் பக்கம் பார்க்க]


விலை ரூபா 5.00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 17 இதழ் 141
யாழ்ப்பாணம் புதன்கிழமை 01 - 07 - 1992


## தெரிவுக்குழு யோசனையை தமிழ் கட்சிகள் நிராகரிப்பு

(கொழும்பு)
நாடாளுமன்றத் தெரிவுக் குழு இனப் பிரச்னைத் தீர் வுக்கு முன் வைக்கவுள்ள வடக்கு-கிழக்கிற்குத் தனித் தனி மாகாண சபை என்ற திட்டத்தைச் சகல தமிழ்க் கட்சிகளும் நிராகரித்துள்ளன. தமது இந்த மறுப்பை

[4ம் பக்கம் பார்க்க]

## முன்னேறும் படைகளுக்கு புலிகளின் கண்ணிகள்தடை

(கொழும்பு)
வெற்றிலைக்கேணியிலிருந்து முன்னேற முயற்சிக்கும் இரா ணுவத்தினருக்கு புலிகளின் ஜொனி மிதிவெடிகள், கண்ணி வெடிகள் பெரும் தடையாக இருப்பதாக 'இராணுவப்பேச்

[4-ம் பக்கம் பார்க்க]

### கட்டைக்காட்டிலிருந்து புல்லாவெளிக்கு

# ராணுவத்தை முன்னேறவிடாது புலிகள் உக்கிர தாக்குதல்

## செம்பியன்பற்றுக்கு நகரவும் படைகள் முயற்சி

(யாழ்ப்பாணம்)
கட்டைக்காட்டிலிருந்து புல்லாவெளிக்கு முன்னேற முயன்றுவரும் இராணுவத்தினரை, விடுதலைப்புலிகள் நேற்று இடைமறித்துப் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டைக்காடு இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர், பாரிய கவச வாகனங்கள் மூலம் பெரும் எண்ணிக்கையில் புல்லாவெளிப் பகுதியை நோக்கி முன்னேற முயன்றபோது விடுதலைப்புலிகள் இவர்களை இடைமறித்து கடும் தாக்குதலைத் தொடுத்தார்கள்.

இராணுவத்தினருக்கு உதவி

[4-ம் பக்கம் பார்க்க]

## கஞ்சிகுடிச்சாறில் 5 பொலிஸார் காயம்

[அம்பாறை]
அம்பாறை மாவட்டத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு பகுதியில், நேற்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் அகப்பட்ட விசேட அதிரடிப்

[4ம் பக்கம் பார்க்க]

## கவச வாகனங்கள் ட்ரக் வண்டிகள் அழிப்பு

[கொழும்பு]
வெற்றிலைக்கேணி பகுதியில் இடம்பெறும் மோதலில் படையினரின் கவசவாகனங்கள் சிலவும், பல 'ட்ரக்' வண்டிகளும் புலிகளின் தாக்குதலுக்கிலக்காகி அழிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

சில பகுதிகளில் படையினர் புலிகளுடன் நேரடிக்கைகலப்பில் ஈடுபட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ந்து இடம்பெற்றுவரும் மோதலில் படையினர் பலத்த இழப்புக்களை எதிர்நோக்குவதாகவும் தெரியவருகிறது. [சி]

## கிழக்கில் 20 தமிழர்கள் இராணுவத்தால் படுகொலை

(மட்டக்களப்பு)
கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர், தமிழ்க் கிராமங்களுக்குள் புகுந்து சுமார் 20க்கும் மேற்பட்ட தமிழர்களைச் சுட்டும், வெட்டியும் கொலை செய்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

கொக்கட்டிச்சோலை, வவுணதீவு, 19ம் கட்டை, உன்னிச்சை ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர், பலத்த துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தவண்ணம், நெல்லிக்காடு, காலம்போட்டமடு, சாமந்தி ஆறு, பன்சேனை, தாண்டாமலை ஆகிய தமிழ்க் கிராமங்களுக்குள் புகுந்து, 20க்கும் அதிகமான தமிழ்மக்களைச் சுட்டும், கத்தியால் வெட்டியும் கொலை செய்த

(4ம் பக்கம் பார்க்க)

## வாகரை மோதலில் 5 படையினர் காயம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் இடம்பெற்ற கடும் மோதலில் 5 படையினர் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வாகரைக் காட்டுப் பகுதியில் பெருமளவு படைகள் குவிக்கப்பட்டு இப்பகுதியில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் இப்பகுதியில் பெருமளவு படைகள் குவிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வந்ததும் குறிப்பிடத்தக்கது. [சி]

## பத்து விமானங்கள் கடும் குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)
கட்டைக்காடு, வெற்றிலைக் கேணி, புல்லாவெளிப்பகுதிகளில் நேற்று பத்திற்கும் மேற்பட்ட விமானங்கள் கடுமையான குண்டுவீச்சு தாக்குதல்களை மேற்கொண்டன.

(4ம் பக்கம் பார்க்க]

## சங்கீத ஆசிரியருக்கு பட்டதாரி சம்பளம்

(கொழும்பு)
சங்கீத ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியாவில் 4 வருடகற்கை நெறியை மேற்கொண்டு பயிற்சியை முடித்துக்கொண்ட சங்கீத பூஷணம், சங்கீத வித்துவான் ஆகிய பட்டங்களைப் பெற்று சங்கீதஆசிரியர்களாக கடமையாற்றி வருவோருக்கே பட்டதாரிச் சம்பளம் வழங்கப் படவுள்ளது.

இத்தகைய ஆசிரியர்களுக்கு 1985 ஜனவரி 16 முதல் பட்டதாரிகளுக்கான சம்பளம் வழங்கப்படும். 85ம் ஆண்டு ஜனவ

[4-ம் பக்கம் பார்க்க]

## மேஜர் அழகனுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)


வெற்றிலைக்கேணி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 'ஈழநாதம்' மேஜர் அழகன் உட்பட மூன்று வீரவேங்கைகளுக்கு யாழ். குடாநாடு முழுஅளவில் அஞ்சலி செலுத்தியது.

வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. வீதிகளிலும், கட்டடங்களிலும் மஞ்சள் சிவப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டன.

மேஜர் அழகனின் புகழுடல் நேற்று அவரின்சொந்த இடமான கல்வயலிலிருந்து நண்பகல் 12-30 மணிக்கு யாழ் நகருக்கு இராணுவ மரியாதையுடன் கொண்டுவரப்பட்டு, ''ஈழநாதம்'' காரியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

(4ம் பக்கம் பார்க்க)

## பொம்மர் தாக்குதலினால் பாடசாலைகள் இயங்கவில்லை

[சாவகச்சேரி]
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலை அடுத்து, நேற்று சாவகச்சேரி நகரிலுள்ள பல பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமுகமளிக்காததால் பாடசாலைகள் இயங்கவில்லை.

இதேவேளை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி என்பன மறு அறிவித்தல் வரும்வரை மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (155)

## யுத்தத்திற்கு மாதாந்தம் 30 கோடி ரூபா செலவு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்திற்கு அரசு மாதாந்தம் 30கோடி ரூபாவை செலவிடுவதாக அமைச்சர் அல்ஹாஜ் ஏ. எஸ். எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு வருடங்களாக நடைபெற்றுவரும் இந்த யுத்தத்தினால் பெருமளவு பணம் விரயமாகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து இவ்வாறான நிதி பாதுகாப்பிற்கென செலவு செய்யமுடியாத நிலை சிறிலங்கா அரசுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (சி-ரி)

## வரி விளம்பரம்


### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

### மணமகள் தேவை

09-05-61ல் பிறந்த, லண்டனில் உள்ள செவ்வாய்க்குற்றமில்லாத எலக்ரோனிக் எஞ்சினியருக்கு 27 வயதுக்கு குறைந்த அழகான M.B.B.S. டாக்டர் அல்லது எஞ்சினியர் அல்லது கணக்காளர் மணமகள் தேவை. தொடர்பு: வே. இந்திரன் (ஆசிரியர்), கட்டாபாலி ஒழுங்கை, மானிப்பாய். (சி-6479)

### தவறிவிட்டது

26-06-92 வெள்ளிக்கிழமை அன்று பருத்தித்துறை வீதியால் புத்தூருக்குச் சென்றபோது நல்லூருக்கும் புத்தூருக்கும் இடையில் எனது மணிக்கூடு (சிற்றிசன்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. மகாலிங்கம், சோதிவேம்படி ஒழுங்கை, மானிப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-6481)


# ரயில்வே சேவையை அதிகார சபையின் கீழ் கொண்டுவர முயற்சி

(கொழும்பு)

நாட்டின் ரயில் சேவையை அதிகாரசபையின் கீழ் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது.

போக்குவரத்துநெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மென்டிஸ் கோட்டையில் நேற்றுமுன்தினம் ஜாதிக சேவக சங்கத்தின் கிளை அலுவலகத்தை திறந்துவைத்து உரையாற்றும்போது இதனை தெரிவித்தார்.

கடந்த 127 வருடங்களாக ரயில்வே திணைக்களம் அரசாங்க சேவையின் கீழ் இயங்கி வந்துள்ளது.

இதற்கு முன்னர் இத்திணைக்களத்தை மக்கள் மயப்படுத்தும் திட்டத்தின் கீழ்கொண்டுவர அரசினால் ஆலோசிக்கப்பட்டபோது பல வழிகளில் எதிர்ப்பு ஏற்பட்டு பின் அம்முயற்சி அப்போது கைவிடப்பட்டது.

தற்போது இச்சேவை நட்டத்தில் இயங்குவதாக காரணம்காட்டி அதிகாரசபையின் கீழ் கொண்டுவரப்போவதாக அரசு அறிவித்துள்ளது.

வடபகுதிக்கான ரயில் சேவை தடைப்பட்ட பின்பே ரயில்வே திணைக்களம் பாரிய நட்டத்தை ஏற்கவேண்டிவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. [கே]

# பனம் பொருள் அபிவிருத்தி 10 லட்சம் டொலர் உதவி

(கொழும்பு)

ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்டப்பிரிவு பனம்பொருள் அபிவிருத்தி திட்டத்தைநடைமுறைப்படுத்துவதற்கென 10 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது.

பல்வேறு பனம்பொருள் உற்பத்தி தொழிலை அபிவிருத்தி செய்வதே இதன் நோக்கமாகும்.

பனம்பொருள் உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொள்வது, தரமான உற்பத்தி பொருள்களை அறிமுகப்படுத்துவது ஆகியவற்றிற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

இலங்கையில் பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு அதுதொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக இந்தோனேசியா, இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு பிரயாணம் மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படும். (கே)

## அகதிகள் வீட்டில் திருட்டு

[ஏழாலை]

மல்லாகம் மத்தி சி. விவேகானந்தன் வீட்டில் ஓட்டினை பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் அலுமாரியை உடைத்து ரொக்கப்பணம், மோட்டார் சைக்கிள் ரயர்கள் உடுபிடவைகள், மற்றும் பல வீட்டுப் பொருட்களையும் திருடிச்சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் நடந்தவேளையில் வீட்டுக்காரரும், சுற்றுடல் மக்களும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். கல்லூரியில் 'காத்தவராயன்'

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் மாணவர்களின் சஞ்சிகைக்காக யாழ். பல்கலைக்கழக நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் கலாநிதி இ. பாலசுந்தரத்தின் 'காத்தவராயன்' (சிந்து நடைக் கூத்து) யூலை 4ம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து இன்னிசைக் கானமும் இடம் பெறும்.

## பதுக்கல் வேட்டை: மீட்கப்பட்ட மண்ணெண்ணை மக்களுக்கு விநியோகம்

[பண்டத்தரிப்பு]

பதுக்கல்வேட்டையின்போது கைப்பற்றப்பட்ட ஆறு பரல் மண்ணெண்ணை கடந்த திங்கட்கிழமையன்று பண்டத்தரிப்பு சந்தைக்கு சமீபமாக வைத்து விடுதலைப் புலிகளினால் பொதுமக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு ஒரு லீற்றர் என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டது. பெருந்தொகையான மக்கள் வரிசையில் நின்று இந்த மண்ணெண்ணையை வாங்கிச் சென்றனர். (72)

## கசிப்பு விற்றவர் கைதானார்

(மானிப்பாய்)

சித்தன்கேணியில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நபரொருவர் தமிழீழ காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த 28ம் திகதி வெள்ளிக்கிழமை கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அவ்விடத்திலுள்ள வீடொன்றை சுற்றி வளைத்த காவல்துறையினர் சம்பந்தப்பட்ட நபரை கைதுசெய்ததுடன் அவர் வைத்திருந்த பலலீற்றர் அடங்கிய கசிப்பையும் கைப்பற்றியதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

## சைக்கிள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தைக்கு பொருட்கள் வாங்க வந்த மாதகல் வாசி ஒருவரின் 3,500 ரூபா பெறுமதியான 'ரலி' சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் திருடப்பட்டது.

மாதகல் மேற்கை சேர்ந்த ச. அந்தோனிப்பிள்ளை என்பவரின் சைக்கிளே இவ்வாறு திருட்டுப் போயுள்ளது. சங்கானை காவல் நிலையத்தில் இத்திருட்டு சம்பவம் குறித்து முறைபாடு செய்யப்பட்டுள்ளது. (72)

## விவசாயிகளுக்கு மண்ணெண்ணை

[புலோலி]

புலோலி பல நோக்குக்கூட்டுறவுச்சங்கம், சங்கப்பரப் பெல்லைக்குள் வசிக்கும் விவசாயிகளுக்கு தலா பத்து லீற்றர் வீதம் கிளைக்குழுவின் சிபார்சில் மண்ணெண்ணை வழங்கப்பட்டு வருகிறது. 61

## உற்சவம்

[கொழும்புத்துறை]

யாழ். சுண்டிக்குளி புனித யுவானியர் தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 24ம் திகதி நடைபெற்றது. யாழ். ஆயரின் கூட்டுத் திருப்பலியுடன் உற்சவம் முடிவுற்றது. திருச்சொரூபவனியும் இடம் பெற்றது. (154)

## இன்று

(மானிப்பாய்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 15 லட்சம் வீடமைக்கும் திட்டத்தின் கீழ் வீடமைப்பு நிவாரண உதவி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று 1ந் திகதி காலை 10 மணிக்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது. [71]

ஃ ஃ ஃ

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் அமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று1ம் தேதி மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (86]

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ்ரன் கல்லூரியில் அதிபராக கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற திரு. ச. சேனாதிராசாவுக்கு காரைநகர் கொத்தணிப் பாடசாலைகள் அதிபர்கள் இன்றுபுதன்கிழமை பி. ப. 2-00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் காரைநகர் கொத்தணி அதிபர் செ. தேவதாசன் தலைமையில் சேவைநலம்பாராட்டு விழா நடாத்தவுள்ளனர்.


விற்பனையாகிறது! வரதர் வெளியீடு

## அறிவுக் களஞ்சியம்

பொது அறிவை வளர்க்கும் நோக்குடையது.

பல அறிஞர்களின் சிறு சிறு கட்டுரைகளுடன் முதலாவது இதழ் வெளிவந்துவிட்டது! இளைஞர்களுக்கான நான்கு போட்டிகளுமுள்ளன. விலை ரூபா 10/- விற்பனையாளர்கள் தேவை. பாடசாலைகளில் விற்பனை செய்யக் கூடியவர்கள் அதிபரின் அறிமுகக் கடிதத்துடன் நேரில்வந்து பிரதிகளைப் பெறலாம், விற்பனைக் கழிவுண்டு.

**அறிவுக் களஞ்சியம்**
**(ஆனந்தா அச்சகம்)**
226, காங்கேசன்துறைச் சாலை,
யாழ்ப்பாணம். [ஏ 2264]



## ஓவியர் பெனடிக்ற் படைப்புகள்

ஓவியர் பெனடிக்ற் அவர்களால் வரையப்பட்ட ஓவியங்கள், எழுதப்பட்ட கட்டுரைகள் அவரைப்பற்றிய கட்டுரைகள் வைத்திருப்போர் அவற்றை இம்மாதம் ஜுலை 3ந் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் எம்மிடம் சேர்ப்பித்து வைத்தால் அவற்றை இம்மாதம் ஜுலை 5ந் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ள அமரர் ஓவியர் திருவுருவ திரைநீக்கத்துடன் இணைந்து ஒரு காட்சியையும் ஒழுங்கு செய்ய உதவும்.

காட்சிப்பொருட்கள் உரியவர்களிடம் மீண்டும் சேர்ப்பிக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டியது:

**"மில்க்வைற்"**
525/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ 2262)



## யாழ். இந்துக்கல்லூரி அன்னை உதிரம் வடிக்கின்றாள்

எமது அன்னை மண்மீட்புப் போரில் தனது புகழ் பூத்த மைந்தன் ஒருவனை மேலும் அர்ப்பணித்துள்ளாள்.

# மேஜர் அழகா

உங்களால் நாம் கௌரவம் அடைந்தோம்
உன் வழியில் நாம்
நூற்றுக் கணக்கில் தொடர்வோம்

**யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்**

யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[ஏ- 2265]



## இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் அழிவுகளும் இடம்பெயர்வுகளும் ஏற்படும்போது எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்பற்றி ஆராய்தலும் தயார்ப்படுத்தலும்

மேற்குறித்த விடயம் தொடர்பாக ஓர் ஆலோசனைக்கூட்டம் 2-7-92 வியாழக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு பருத்தித்துறை தம்பசிட்டியிலுள்ள 'போரூட்' தலைமைச் செயலகத்தில் நடைபெறும்.

வடமராட்சிப் பிரிவிலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள் கிராமசேவை அலுவலர்கள், அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், பொதுச்சேவை அமைப்புக்களின் பிரதிநிதிகள் தனிப்பட்ட சமூக சேவையாளர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஆலோசனைகள் நல்குமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

அமைப்புக்களின் சார்பாகக் கலந்து கொள்வோர் தமது அமைப்புகளினூடாக எவ்வகையான வளங்களைப் பயன்படுத்த முடியும், எத்தகைய செயல்பாடுவில் ஈடுபட முடியும் என்பது தொடர்பாகத் தெளிவான கருத்துக்களை முன்வைக்கும் வகையில் அமைப்புக்களின் ஆலோசனை பெற்றுவருதல் பயனளிக்கும் என நம்புகின்றோம்.

இணைப்பாளர்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
வடமராட்சி.

30-06-92. (சி- 6482)

# புதிய வெட்டுப்புள்ளி முறையை ஆட்சேபித்து 5000 மாணவர் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

1992/91 பல்கலைக்கழக அனுமதியில் அரசு அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய வெட்டுப்புள்ளிமுறையை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக பாடசாலை மாணவர் இணைப்புக் குழு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு மகஜர் ஒன்றை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஊடாக நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்துள்ளது.

இந்த மகஜர்களின் பிரதிகள், உயர் கல்வி அமைச்சர் ஜனாப். ஏ. சி. எஸ். ஹமீத், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளிநாடுகளின் செய்தி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜரில் 5ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கைச்சாத்திட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த மகஜரின் விபரம் வருமாறு:

1990 ஆகஸ்ட் க. பொ. த. (உயர்தர) பரீட்சை வடபகுதியில் நிலவிய சூழ்நிலைகளைக் காரணம் காட்டி வடபகுதியில் மட்டும் நடைபெறாது நாட்டின் மற்றைய பகுதிகளில் நடைபெற்றது. அத்துடன் அப்பரீட்சைக்குப் பதிலாக விசேட பரீட்சை ஒன்று வடபகுதியில் 1991 ஏப்ரலில் நடாத்தப்பட்டதும் ஆனால் இப்போது பல்கலைக்கழக அனுமதியின் போது இவ்விருபரீட்சைகளும் வெவ்வேறு பரீட்சைகளாகக் கருதப்பட்டு, வெட்டுப்புள்ளிகளும் வித்தியாசமானவையாக அமையுமென உயர் கல்வி அமைச்சர் ஏ. சி எஸ், ஹமீத் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இவ்அறிவிப்பானது மாணவர்களிடையே பலத்த ஏமாற்றத்தையும், அரசின் மீது வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது. வடபகுதி இளைஞர்களின் பிரதான குறிக்கோளாக எப்போதுமே கல்வி இருந்து வந்துள்ளது. இது கடந்த காலங்களில் சகல பல்கலைக்கழக புதுமுக பரீட்சைப் பெறுபேறுகளிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. வடபகுதி இளைஞர்கள் அரசுக்கெதிராக கிளர்ந்தெழுந்து ஆயுதப்போராட்டத்தில் குதிப்பதற்கு மிக முக்கிய காரணியாக அமைந்தது 'தரப்படுத்தல் கொள்கை' என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அதே போன்றதொரு தரப்படுத்தல் கொள்கை இப்போது மீண்டும் அவர்கள் முன்வைக்கப்படுகின்றது. ஏமாற்றத்திற்கும் விரக்தியின் விளிம்பிற்கும் செல்லும் இளைஞர்கள் என்ன செய்வார்கள் என்பது தாங்கள் அறியாததல்ல.

1991 ஏப்ரல் விசேடபரீட்சையானது 1990 ஆகஸ்ட் நடைபெற்ற உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டதாகவும், 1991விசேட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குப் போதிய கால அவகாசம் இருந்ததாகவும் காரணம் காட்டி தற்போது இவ்விரு பரீட்சைகளும் வெவ்வேறு பரீட்சைகளாக கருதப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது

உயர்தரப் பரீட்சைகளில் ஒத்த கேள்விகள் வினாத்தாள்களில் இடம்பெறுவது இது முதல்தடவையல்ல. உதாரணமாக:

1990 ஆகஸ்ட் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் கட்டுரை வினாப்பகுதியில் இடம் பெற்ற 11 (ஏ) வினாவானது 1980 ஆகஸ்ட், 1986 ஆகஸ்ட், 1988 ஆகஸ்ட் வினாத்தாள்களிலும், 5 சி) வினாவானது 1988 ஆகஸ்ட் 10 (பி) வினாவானது 1986 ஆகஸ்ட்டிலும் இடம்பெற்றவையாகும்.

(2) 1991 ஆவணியில் நடைபெற்ற பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் வினா 5 [ஏ) ஆனது 1989 ஆவணியிலும் வினா 7 [சி) ஆனது 1989 ஆவணியிலும், வினா 8 [சி), 11 [ஏ) என்பன 1988 ஆவணியிலும் வினா 12 [பி), [சி] ஆனது 1991 சித்திரை பரீட்சையிலும் இடம் பெற்றவை ஆகும்.

(3) 1990 ஆவணி உயர்தரப்பரீட்சை தாவரவியல் பாடத்தில் கட்டுரை வினா 4 [1) ஆனது 1986 பரீட்சையிலும், வினா 1 ஆனது 1982ஆவணி. 1980 பரீட்சையிலும்இடம்பெற்றவைஆகும்,

எனவே, ஒத்த கேள்விகள் இடம்பெற்றன என்ற காரணம் காட்டி இவ்விருபரீட்சைகளையும் வேறுபடுத்துவது நியாயமானதல்ல.

மேலும் 1987 மார்கழியில் நடைபெற வேண்டிய சாதாரணதரப் பரீட்சை வடபகுதி மாணவர்களுக்கு 6 மாதங்கள் காலதாமதமாகியே நடைபெற்றது, அதன் பிற்பாடு தான் அவர்கள் உயர்தரம் கற்க ஆரம்பித்தார்கள். எனவே அவர்களுக்கு மேலதிக கால அவகாசம் இருந்ததென்ற காரணம் தவறானதாகும்.

1990 ஆவணி பரீட்சை இங்கு குழம்பியதற்கு அப்பாவி மாணவர்கள் எவ்விதத்திலும் காரணமாக அமையவில்லை. அப்பரீட்சை குழம்புவதை அவர்கள் விரும்பியும் இருக்கவில்லை. உண்மையில், அப்பரீட்சைக்கான ஆயத்தம் உச்சநிலையில் இருந்த வேளையில்தான் அப்பரீட்சை நடைபெறாமல் போய்விட்டது. அப்பரீட்சை குழம்பிய போது அவர்கள் பலத்த ஏமாற்றம் அடைந்திருந்தார்கள் அவ்வாறிருந்தும், தங்களுக்கான விசேட பரீட்சை நடைபெறுமா? என்ற சந்தேகத்தோடும், எப்போது நடக்கும்? என்ற அங்கலாய்ப்புடனும் யுத்தத்தாலும், பொருளாதாரத் தடைகளால் ஏற்பட்ட பாதிப்புக்களின் மத்தியிலும் 1991 சித்திரையில் நடாத்தப்பட்ட விசேட பரீட்சைக்கு தோற்றினார்கள். இப்பரீட்சை நடப்பதற்கு முன்னர் இவ்விசேட பரீட்சை 1990 ஆகஸ்ட்டில் நடைபெற்ற பரீட்சையிலிருந்து வித்தியாசமானதாகக் கருதப்படுமென அவர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. ஆனால் திடீரென அவர்களை விரக்தியின் விளிம்பிற்கு இட்டுச் செல்லும் விதமாக இருபரீட்சைகளும் வெவ்வேறாகக்கருதப்படும்' என அறிவிக்கப்படுவது அரசானது திட்டமிட்டு வடபகுதி மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியைக் கட்டுப்படுத்துகின்றது என்றே நாம் கருதவேண்டியுள்ளது.

இரு பரீட்சைகளும் வேறு வேறு பரீட்சைகளாகக் கருதப்பட்டு தேசிய மட்டத்தகுதி அடிப்படை ஒதுக்கீடாகிய 40வீத இடங்களை ஒவ்வொரு துறைகளிலும் இருபரீட்சைகளிலும் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அடிப்படையில் விகிதாசாரப் படுத்துவது மிகவும் பாரதூரமான ஒரு செயலாகும். இச்செயலினால் வழமையாக ஒவ்வொரு வருடமும் யாழ். மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 50வீதத்தால் குறைவடைகின்றது.

1979இல் இரு உயர்தரப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு இரு பரீட்சைகளும் ஒன்றாகவே கருதப்பட்டன. 1989ல் வடபகுதியில் பரீட்சை நடாத்தக்கூடிய சூழ்நிலை இருந்தும், நாடு முழுவதுமே பரீட்சை நடாத்தப்படவில்லை. எனவே இவ்வாறான செயல்கள் அரசாங்கமானது திட்டமிட்டே தமிழ் மாணவர்களைப் புறக்கணிக்கிறது என நாம் கருதுகின்றோம்.

எனவே நாம் உங்களிடம் கேட்பது இரண்டு விடயங்களை தான்:

இரு பரீட்சைகளையும் மதிப்பீட்டு நோக்கத்திற்காக ஒரே பரீட்சையாகக் கருதவும். அல்லது.

கடந்தகால சராசரியிலும் பார்க்கமிக அதிகமாக பெறுபேறுகளை யாழ் பரீட்சார்த்திகள் பெற்றிருந்தால், கடந்த 5 ஆண்டுகளில் தேசிய மட்டதகுதி அடிப்படை ஒதுக்கீட்டில் யாழ். மாணவர்கள் ஒவ்வொரு துறையிலும் பெற்ற சராசரி விகிதாசார இடங்களுக்குச் சமமான விகிதாசார இடங்களை யாழ். மாவட்டபரீட்சார்த்திகளுக்கு ஒதுக்கவும்.

நாம் சலுகைகாட்டும்படி கோரவில்லை. எமது நியாயபூர்வமான உரிமைகளை வழங்கும்படியே கோருகின்றோம். நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டால் அவை மாணவர்களைப் புரட்சிப் பாதைக்கு அழைத்துச்செல்லும் என்பதில் ஐயமில்லை.

(வி)

## வீராங்கனை விருதுபெற்றார்

(கொழும்புத்துறை)

யாழ்.அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையைச் சேர்ந்த மாணவி செல்வி யேசுதாசன் ஜனிலா என்பவர் அண்மையில் நடைபெற்ற யாழ். கோட்ட மெய்வல்லுநர் போட்டியில் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வீராங்கனை விருதைப்பெற்றுள்ளார். [154]

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவைச் சேர்ந்த காசிப்பிள்ளை அம்பிகாபதியின் அடையாள அட்டை திரு. யோ செபமாலை என்பவரால் ஐந்து சந்தி மாவடி வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

0 0

ஒரு திறப்புக் கோர்வை மானிப்பாய்வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## இந்திய புலனாய்வு குழு இலங்கைவர அனுமதி மறுப்பு

[கொழும்பு]

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை சந்தேகநபர்கள் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த இந்திய புலனாய்வு பிரிவு [சி. பி. ஐ] அதிகாரிகள் கொழும்புவர இலங்கை அரசு அனுமதி மறுத்துள்ளது.

இக்கொலைச்சந்தேக நபர்களை தன்னிடம் ஒப்படைக்க இந்தியா முறைப்படி தமக்கு கடிதம் எழுதவில்லை என்று, சி. பி. ஐ. அதிகாரிகள் இலங்கை வர அனுமதி அளிக்காதது தொடர்பாக இலங்கை தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்தியுள்ளது.

இலங்கையின் போக்கு தமக்கு வியப்பைத் தருவதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரி]

## அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்கள் களவு போயின

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் தேசிய அடையாள அட்டையைப் புதிதாகப் பெறுவதற்கு விண்ணப்பித்த நூற்றுக்கு மேற்பட்டோரின் விண்ணப் படிவங்கள், நேற்று முன்தினம் யாழ். நகரில் களவாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விண்ணப்பப் படிவங்கள் அடங்கிய 6 பொதிகளை யாழ். செயலகத்திலுள்ள ஆட்பதிவுத்திணைக்களப் பிரிவிலிருந்து கொழும்பு ஆட் பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக யாழ். தபால்நிலையத்திற்கு நேற்று முன்தினம் காலை 10-30 மணிக்கு எடுத்துச் செல்லும் போது, யாழ் பிரதான வீதியிலுள்ள பஸ்தியான் சந்தியில் வைத்து இப்பொதிகள வாடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (வி)

## இராசி பலன்

01-07-1992
புதன்கிழமை
(தமிழுக்கு ஆனி 17)

பிரதமை பி. ப.4-23 வரை புனர்பூசம் பி. இ 1-30வரை, இராகு காலம் காலை 11-56 முதல் 1-26 வரை, சுபநேரம் மாலை 4-26 முதல் 5-56வரை, சித்தயோகம்

மேடம்: பணவிரயம், உறவினர் மனத்தாங்கல், விவாதம்.

இடபம்: காரிய அனுகூலம். உல்லாச பயணம், வஸ்திர லாபம்.

மிதுனம். வீணான குழப்பம், தாய்வழி வரவு, வாக்குப் பகை.

கடகம்; கல்வியில் ஈடுபாடு, மனநிறைவு, குடும்பசுகம்.

சிங்கம்:அதிகாரிகளின்சினம் உடல்நலம் பாதிப்பு, மன வேதனை.

கன்னி: சுபச்செய்தி, தன லாபம், கலாரசனை.

துலாம்: நற்செயலுக்கு பாராட்டு, தொழிலனுகூலம், புதிய திட்டம்.

விருச்சிகம்: கட்டுப்படுதல், மனத் தளர்ச்சி, காலதாமதம்.

தனுசு: சிறு துன்பம், வாக்குக் கலகம், முயற்சி தோல்வி.

மகரம்: சமூகத்தில் பாராட்டு, தொழில் லாபம், புதிய முயற்சி

கும்பம்: உறவினர் அனுகூலம், எதிரிகள் நன்மை, விருந்து.

மீனம்: மனத்தில் இனம் புரியாத திகில், பேச்சில் சாதனை, அகாலஉறக்கம்.

—ஜோஸ்யர்

## 'அழகு' என்னும் ஆளுமை

மக்களோடு மக்களாய் இனவிடுதலைக்கு தன்னை அர்ப்பணித்த வீரவேங்கை அழகன் மறைந்த செய்தி அவருடன் பழகிய அனைவருக்கும் பேரதிர்ச்சியைக்கொடுக்கும் அன்போடு பழகிய அனைவரும் அவரை அழகண்ணே'' என்று செல்லமாக அழைப்பதுண்டு. தானுண்டு தன்வேலையுண்டு என்று கருதுபவர்கள் எல்லாம் அவரது துணிச்சலை, ஆளுமையை, அவரது புன்சிரிப்பை தட்டிக்கேட்கும் மனிதாபிமான உணர்வை பெருமையாக பேசுவதுண்டு.

களத்திற்குசெல்பவன் களத்திலே வீரமரணத்தை தழுவுவதுதான் அவனது லட்சியம் என்ற உணர்வை சொல்லாமல் கொள்ளாமல் நிறைவு செய்து விட்டாலும் அந்த ''அழகு'' என்னும் ஆளுமையை நாம் எங்குமே இனி காணமுடியாது.

பள்ளிக்கூட வாழ்விலே அவரது இனவிடுதலை உணர்வை கல்லூரிஆசிரியர்கள் பெருமையாக பேசி அவரைப்புகழ்வதுண்டு. சாவகச்சேரி மண் விடுதலையின் விளைநிலம் விடுதலை வித்துக்கள் அந்தமண்ணிலேதான் முதல் முதலாக தோன்றியகாலத்திலே இளைஞரான செல்வராசா இளங்கோவும் 1983ல் தன்னை விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் இணைத்துக்கொண்டார்நீண்ட நெடும்பயணத்தில் மூத்த உறுப்பினராக பலகளம் கண்டவர் மேஜர் அழகன். தலைவர்கள் கூட அவரை எப்போதும் வாஞ்சையுடன் செல்லமாக ''அழகு'' ''அழகு'' என கொஞ்சிமகிழ்வதுண்டு. அவரது முகத்திலே இடர்பல வரினும் 'புன்னகை'' மறைவதில்லை. சிரித்துச்சிரித்து நிதானமாக பதில்சொல்வதே அவரது தனி 'அழகு'

தமிழ் தேசியஇனத்தின் விடுதலைக்கு தனியான பத்திரிகையொன்று அமைக்கப்படவேண்டுமென்று இந்திய அமைதிப்படை இலங்கையை ஆக்கிரமிப்பு செய்தகாலத்தில் ''களத்திலே'' அவர் கனவு கண்டார். அவரது கனவை செயல்படுத்துவதற்கு தலைவர் வே. பிரபாகரனின் ஆணை கிடைத்தது.

அதற்கான முயற்சியை இந்தியப்படையை விரட்டிய சில நாட்களில் தமிழ்ஈழத்தில் நிறைவுசெய்த செயல்வீரராக அவர் காணப்பட்டார். இரண்டு ஆண்டுகளாக செயல் வீரராக அப்பணியை நிறைவு செய்து கொண்டிருந்தபோது காலன் அவரரைக்கவர்ந்தது எமது துர்அதிர்ஷ்டமாகும்.

பத்திரிகையாளர் களத்தில் இருந்து செய்தி எடுத்து பிரசுரிக்கவேண்டுமென்ற துணிச்சல் இன்று நேற்று வந்ததில்லை. பல களங்களில் அவர் அப்பணியை திறம்பட நிறைவு செய்தவர். கட்டைக்காடு இறுதிப்போர் அவரது இலட்சியவெறியை தடுத்து எமக்கெல்லாம் சோகத்தை வரவழைத்து ''ஐயோ அழகண்ணே'' என வாய்விட்டுப் புலம்பவைத்துவிட்டார் அவரது பிரிவு தமிழீழ பத்திரிகைத துறைக்கு ஒரு பேரிழப்பாகும்.

- ஸச்சி.

## புலிகளை ஆதரித்து ——
# ஒரு லட்சம் இந்தியத்தமிழர் சிறைசெல்லத்தயார் - டாக்டர் ராமதாஸ்

[சென்னை]

விடுதலைப்புலிகளை ஆதரித்து ஒரு லட்சம் இந்தியத் தமிழர்கள் சிறைசெல்ல தயாரரக விருப்பதாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரான டாக்டர் ராமதஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சாத்தூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது: ஈழ மக்களின் வரலாற்றைப் படிப்போமேயானல் விடுதலைப் புலிகளை நிச்சயம் ஆதரிப்போம் என்று தமிழக மக்களும் சொல்லுவார்கள். இலங்கையிலுள்ள தமிழர்களின் நிலைமையைப் பார்த்த பின்னர் நாங்களும் தமிழர்களாக இருக்கும் காரணத்தால் அவர்களை ஆதரிக்கிறோம் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் துப்பாக்கி ஏந்தி சிங்கள இராணுவத்தோடு நேருக்கு நேர் போராடிக்கொண்டிருக்கின்றனர். காயப்பட்டு அவயங்களை இழந்தவர்களுக்கு தமிழகம் கொண்டு வந்து சிகிச்சை அளிக்க தமிழக அரசு மறுத்து வருகிறது. நாங்கள் புலிகளை ஆதரிக்கின்றோம் அதற்காக தமிழகத்திலுள்ள ஒரு லட்சம் தமிழர்கள் சிறை செல்லவும் தயார் அதற்காக ஏழு வருடங்கள் சிறை செல்லவும் தயார் என்றார். (மா)

## வீரச் சாவு

[யாழ்ப்பாணம்]

கட்டைக்காட்டில் நேற்று நடைபெற்ற மோதலில் சோலைவண்ணன் [விசு - வீரச்சாமி சுதாகர்-கோண்டாவில் ஸ்ரேசன் வீதி], கூத்தரசன் (குவேன் - பாலசுப்பிரமணியம் கிரிதரன்-காளிகோவிலடி- சங்கானை], இசைவாணன் (கீதன்) நடராசா வில்வராசா - சென்றல் காம்-அம்பாறை), மறைச்செல்வன் [அமிர்தன்] குமாரவேல் வெனிலோ - பட்டின சபை ஒழுங்கை- மானிப்பாய்) ஆகியோர் வீரச்சாவைதழுவிக் கொண்டனர்.

வேங்கைகளின் பூகழுடல்கள் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு மானிப்டாய் இந்துக் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் புகழுடல்கள் விதைக்கப்படும். (சு)

## குழாய்க் கிணறு

[கொழும்புத்துறை)

யாழ். குருநகர் சென் ரேக் சனசமூக நிலையவளவில் குழாய்கிணறு ஒன்று மக்கள் பாவனைக்காக நிலையத் தலைவரால் ஆரம்பித்து வைக்சப்பட்டது. [154)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். வைத்தியசாலையில் இருந்து கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக யாழ். வைத்திய நிபுணர்களினுல் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களைத் தெரிவு செய்து பதிவு செய்வதற்கென, இம்மாதம் 6ம், 7ம் திகதிகளில் காலை 9-00 மணியிலிருந்து சமூக[illegible] பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் அறிவித்துள்ளார்.

நோயாளர்கள் தங்களைப் பதிவு செய்ய வரும்பொழுது, அடையாள அட்டை உட்பட சகல ஆவணங்களையும் தவறாது கொண்டுவருமாறும் அறிவித்துள்ளார். (56)

## பலஸ்தீன தளபதி சுட்டுக் கொலை

(பெய்ரூட்)

பலஸ்தீன விடுதலை அமைப்பின் தளபதி ஒருவர் நேற்று லெபனுன் துறைமுக நகரான சித்தாவில் வைத்து ஆயுதம் தாங்கிய குழுவினர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கேர்ணல் அன்வர் பதி காரில் சென்று கொண்டிருந்த போதே இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. [சு]

## குமணவில் உரம் வருகிறது

(யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான உர வகைகள் குமண என்ற கப்பலில் வரவிருக்கிறது.

அடுத்த வார இறுதியில் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வரும் குமண கப்பலில் விவசாயிகளுக்குத் தேவையான 1500 மெ.தொன் உர வகைகள் வருவதாக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். [வி]

### கஞ்சிகுடிச்சாறில்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பொலிஸார் ஐவர் பலத்த காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த 5 பொலிஸாரும் ஆபத்தான நிலையிலிருப்பதாகக் கூறப்படுகிறது. (மா)

### தீர்வு எதுவும்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறது.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் கூட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படாததையடுத்து மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதேவேளையில் பிராந்திய சபைகளின் பிரேரணைகள் தமிழ்க் குழுக்களால் நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் தமிழ்க்குழுக்கள் வடக்கு - கிழக்கு உட்பட்ட 4 அம்சத்திட்டத்தை ஶ்ரீலங்கா அரசு ஏற்றுக்

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு மகேஸ்வரி

காரைநகர் பலுகாட்டை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 237/14 கே.கே.எஸ். வீதியில் வசிப்பவருமாகிய திருநாவுக்கரசு மகேஸ்வரி காலமாகி விட்டார். அன்னார் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியாரும் சிவனேந்திரா, சிவரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலம் சென்ற முன்னாள் யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகர் அருளையலம் பிள்ளையின் இளைய மருமகளும் ஆவார். பூதவுடல் இறுதிக்கிரியைக்காக அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று காலை 9-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
அ. திருநாவுக்கரசு
கணவர்

(சி-6484)

## ஹெலியைக் கண்டு ஓடிய மூவர்கிணற்றில் வீழ்ந்தனர்

(சித்தன்கேணி)

மூளாய் வீதியிலுள்ள காளி அம்மன்வீதியில் நாடகம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் நள்ளிரவு வந்த ஹெலியைக்கண்டதும் கிலிகொண்டு ஓடி கிணற்றினுள் விழுந்தனர்.

நேற்றுமுன் தினமிரவு 11 மணியளவில் பலாலியில் இருந்து காரைநகர் நோக்கி ஹெலி பறந்து கொண்டிருக்கும்போது மூளாய் காளி அம்மன் வீதியில் பெருந்திரளான மக்கள் காத்தவராயன் நாடகத்தை பார்த்துக்கொண்டிருந்தனர். ஹெலியைக் கண்டதும் மின்சாரம் அணைக்கப்பட்டது.

நாடக ரசிகர்கள் அங்கும் இங்கும் ஓடும்போது மூவர் கிணற்றுக்குள் விழுந்தனர். தெய்வாதீனமாக காயம் எதுவுமின்றிமூவரும்கிணற்றுக்குள் இருந்துமீட்கப்பட்டனர். (137)

### சங்கீத
(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ரிக்கு முன் இளைப்பாறியோருக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது. இதேஆண்டு ஜனவரி 1ம் திகதிக்குப் பின் ஓய்வு பெற்றவர்களுக்கான சம்பளமும் மாற்றியமைக்கப்பட்டு அதிகரித்த சம்பளம் வழங்கப்படுவதுடன் அதிகரித்த ஓய்வூதியமும் வழங்கப்படவுள்ளது. (சி)

### கிழக்கில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துடன், தமிழர்களின் வீடுகளை எரித்தும், 9 தமிழர்களைக் கைதுசெய்தும் முகாம்களுக்குக்கொண்டு சென்றனர்.

கடந்த வாரம் 27ம் திகதி மேற்படி பகுதிக்குள் புகுந்த இராணுவத்தினர், இப்படுகொலைகளைச் செய்துவிட்டு 28ம் திகதியன்று முகாம்களுக்குத் திருப்பியதாகவும் கூறப்படுகிறது. (வி)

கொள்ளவேண்டுமென வற்புறுத்தி வருவதாகவும் தெரிய வருகிறது. (சு)

## கால்நடையாக புனித யாத்திரை

(புண்டத்தரிப்பு]

மடுமாதா ஆலய உற்சவத்தில் நாளை 2ம் தேதி கலந்துகொள்வதற்காக மாதகல், சில்லாலை பகுதிகளிலிருந்து பல குடும்பங்கள் கால் நடையாக புறப்பட்டு சென்றுள்ளனர்.

நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதற்காகவே இவர்கள் இவ்வாறு கால்நடையாகப் புறப்பட்டு சென்றுள்ளனர். [72)

### பத்து விமானங்கள்
[1-ம்பக்கத் தொடர்ச்சி]

அவ்ரோ, பொம்மர். வை 12, பயணிகள் விமானம், சுப்பர் சொனிக் விமானம், ஹெலிகொப்டர்கள் போன்றவற்றிலிருந்து இப்பகுதிகளை நோக்கி பலத்த குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று அதிகாலை தொடங்கிய தாக்குதல்கள் மாலைவரை நீடித்தன என்று அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரீ-56)

# வாகரையில் 13 தமிழர்கள் ராணுவத்தால் சுட்டுகொலை

(மட்டக்களப்பு]

வாகரைப்பகுதியில் 13 பொது மக்கள் இராணுவத்தினரால் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக சிறிலங்கா படையினர் மற்றும் தேச விரோத கும்பல்களின் சுற்றிவளைப்பில் இக்கிராமம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட அனைவரும் பொதுமக்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்கு உணவுப்பொருள் விநியோகிப்பது இதுவரைகாலமும் படையினரால் தடைசெய்யப்பட்டிருந்தது.

அண்மையில் தொண்டர் நிறுவனம் ஒன்று இப்பகுதிக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று அரச சார்பு செய்திகளில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட போதும் தற்பொழுது இறந்த அனைவரும் பொதுமக்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி)

### தெரிவுக்குழு
(1-ம் பகுத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் திரு மங்கள முனசிங்காவுக்குத் தமிழ்க் கட்சிகள் கூட்டாக அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு இணைப்பு உட்பட தாம்முன் வைத்துள்ள நான்கு அம்சத் திட்டத்தையும் இன்று இக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளன.

ஏற்கனவே இக்கட்சிகளின் நான்கு அம்சத் திட்டத்தைத் தெரிவுக் குழு நிராகரித்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

### கட்டைக்காட்டிலிருந்து
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக விமானப்படை விமானங்கள் பலத்த குண்டுத்தாக்குதல்களையும் மேற்கொண்ட வண்ணம் இருந்தன.

இதேநேரம் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, புல்லாவெளிப்பகுதிகளிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளையும் சுற்றி நேற்று 3ம் நாளும் பலத்த விமானக் குண்டுவீச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும், வெற்றிலைக்கேணியிலிருந்து செம்பியன்பற்றுப் பகுதிக்கும் இராணுவம் முன்னேறபெரும்முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் புலிகளின் கடுமையான தாக்குதல்களினுல் இராணுவத்தினருக்குப் பெரும்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை இருபகுதியினருக்குமிடையில் ஏற்பட்ட சண்டை மாலை வரை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வி-56)

### மேஜர் அழகனுக்கு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதிகள், திரு. யோகரட்ணம் யோகி, திரு புதுவை இரத்தினதுரை. யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உட்பட பலமுக்கிய பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தியதுடன், ஆயிரக்கணக்கான பொதுமக்களும், சகபத்திரிகை ஸ்தாபன ஊழியர்களும் மலர்வளையங்கள் சாத்தி மறைந்த மாவீரனுக்கு அஞ்சலி செலுத்தினர்கள்.

இதனைத் தொடர்ந்து மேஜர் அழகனின் புகழுடல் பிற்பகல் 2-30 மணிக்கு வாகனத்தில் ஊர்வலமாக கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள அன்னாரினது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்சப்பட்டு பின்னர் அவரது புகழுடல் சொந்த இடமான கல்வயலில் உள்ள கண்ணன் பாடசாலையில் வைக்கப்பட்டு கொடிகாமம் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவரோடு வீரச்சாவைத் தழுவிக்கொண்ட சேரன், சிற்றம்பலம் ஆகிய இரு வீர வேங்கைகளின் பூதவுடல்கள், யாழ். புகையிரத நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. (வி-56)

### முன்னேறும்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்பொழுது நடைபெறும் சண்டையில் ஜொனி மிதிவெடியில் சிக்கி பல படையினர் காயமடைந்துள்ளதாகவும் அவர் கூறினர்.

முன்னேற முயற்சிக்கும் படையினரை அசையமுடியாதவாறு புலிகளின் கண்ணிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இக்கண்ணிகளால் படையினரின் முன்னேற்றத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மூவாயிரம் இராணுவ வீரர்கள் சகிதம் விமானப்படை, கடற்படை உதவியோடு இந்தப் போரில் சிறிலங்கா இராணுவம் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. [மா-ரீ]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General Post office Srt Lanka under Licence Number B/10336/81